## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (03.01.2024 முதல் 07.01.2024)

**அறிக்கைஎண் 001/2024** **தேதி.02.01.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 14°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 5°செ முதல் 10°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

கோயமுத்தூர் மாவட்டத்தின் 29.12.23 முதல் 01.01.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 28°செ முதல் 29°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 21°C முதல் 23°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-9 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (29.12.2023 முதல் 01.01.2024) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 07.01.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29/12 | 30/12 | 31/12 | 01/01 | தேதி | நாள்-1 03/01 | நாள்-2 04/01 | நாள்-3 05/01 | நாள்-4 06/01 | நாள்-5 07/01 |
| 0.0 | 0.2 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 1 | 1 | 5 | 4 |
| 29 | 28 | 29 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 29 | 28 | 28 | 28 |
| 23 | 21 | 21 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 21 | 20 | 20 | 20 | 20 |
| 7 | 8 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 5 | 7 | 8 |
| 83 | 90 | 91 | 88 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 80 | 80 | 90 | 90 |
| 68 | 59 | 58 | 55 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 50 | 50 | 60 | 60 |
| 9 | 8 | 7 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 8 | 8 | 10 |
| 360 | 70 | 70 | 70 | காற்றுவீசும் திசை | 70 | 70 | 70 | 70 | 70 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (03.01.2024 முதல் 07.01.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான தூறல் மழை (அ) வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28°செ முதல் 29°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன் பாளையம் | பொள்ளாச்சி வடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **03-01-2024** | 0.0 | 0.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **04-01-2024** | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **05-01-2024** | 1.0 | 1.0 | 3.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **06-01-2024** | 5.0 | 5.0 | 7.0 | 4.0 | 3.0 | 4.0 | 4.0 | 4.0 | 4.0 | 3.0 | 3.0 | 4.0 |
| **07-01-2024** | 1.0 | 2.0 | 2.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 2.0 | 1.0 |

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 6 -12 கி.மீ வேகமான காற்றுடன் தூறல் (அ) வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. ஒத்தி வைத்த உரமிடல், மருந்து தெளித்தல் மற்றும் களை எடுத்தலை முடிக்கவும்.<br>தொடர்ந்து வறண்ட வானிலையே காணப்படுவதால் மக்காசோளம், பருத்தி, மஞ்சள் மற்றும் மரவள்ளி கிழங்கிற்கு போதிய மண் ஈரத்தினை உறுதி செய்யவும். |
| நெல் | கதிர் பருக்கும் பருவம் | கடந்த வார மற்றும் தற்போதைய வறண்ட வானிலை காரணமாக கதிர் பருக்கும் பருவத்திலுள்ள சம்பா நெல்லுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.<br>நெல்லில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் மேலாண்மை செய்ய ஸ்டெரப்டோமைசின் + டெட்ராசைக்ளின் 300 கி + காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1-25 கிலோ/எக்டர் தெளிக்கவும். |
| சோளம் | நிலம் தயாரித்தல் | வறண்ட வானிலை காணப்படுவதால், தைப்பட்ட இறவை சோளம் சாகுபடிக்கு நிலம் தயார் செய்யவும். |
| மக்காச்சோளம் | பூக்கும் பருவம் | தற்போது நிலவும் வானிலையில் 45 நாள் வயதுடைய இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு எக்டருக்கு 74 கிலோகிராம் யூரியா கொண்டு உரமிட்டு நீர்ப்பாசனம் செய்யவும்.<br>மக்காச்சோளத்தில் தண்டழுகல் நோய் மேலாண்மை செய்ய சரியான பாசன வசதி செய்து டிரைக்கோடெர்மா விரிடி 2.5 |

| | | |
|---|---|---|
| கரும்பு | வளர் பருவம் | காற்றின் வேகம் மணிக்கு 6 முதல் 12 கிமீ வேகத்தில் இருப்பதால் வளர்ந்த பின்பட்ட கரும்பு பயிருக்கு இரட்டை வரிசை முறையில் இலைகளை பின்னி சாயதவாறு பார்த்துக் கொள்ளவும். |
| மரவள்ளி | வளர் பருவம் | அதிக ஈரப்பதமும் மற்றும் மிதமான சீதோசனமும் தற்போது காணப்படுவதால், இறவையில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளியில் செர்கோஸ்போரா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. இதைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மாங்கோசெப் மருந்தை கலந்து 15 நாள் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும். |
| கறிவேப்பிலை | வளர் பருவம் | குறைந்தபட்ச வெப்பநிலை 20°C க்கும் குறைவாக இருப்பதனால் கருவேப்பிலையின் மணம் குறைவாக இருக்கும். எனவே பயிரடக்க வானிலையினை மாற்றும் விதத்தில் நீர்ப்பாசனத்தை இரவு நேரத்தில் அளிக்கலாம்.<br>பேசிலஸ் சப்டில்லிஸ் @ 5 மில்லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| மஞ்சள் | அறுவடை | வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முன் பருவம் நடவு செய்த மஞ்சள் கிழங்கினை அறுவடை செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும்.<br>மஞ்சளில் கிழங்க அழுகல் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடியை 2.5 கிலோ தொழுஉரம் 250 கிலோவுடன் கலந்து ஒரு ஹெக்டருக்கு இடவும். |
| வாழை | காய்க்கும் பருவம் | காற்றின் வேகம் மணிக்கு 6 முதல் 12 கிமீ வேகத்தில் இருப்பதால் 5 மாதங்களுக்கு மேலான வாழைக்கு முட்டு கொடுத்து சாயதவாறு பார்த்துக் கொள்ளவும்.<br>வாழையில் வாடல் நோய் மேலாண்மை செய்ய டிரைக்கோடெர்மா விரிடியை 2.5 கிலோ / எக்டர் + 250 கிலோ எருவுடன் கலந்து வேர்பகுதியில் இடவும். |
| கால்நடைகள் | | குறைந்தபட்ச வெப்பநிலை 20°C க்கும் குறைவாக இருப்பதனால் பசுக்களுக்கு போதிய பசுந்தீவனங்கள் மற்றும் கலப்பு தீவனங்களை கொடுப்பதனால் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம். |

*மரவள்ளி கிழங்கிற்கு போதிய மண் ஈரத்தினை உறுதி செய்யவும்.*

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**